**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2017 யூலை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

இங்கு 20 புள்ளிகளுக்காக 8 கட்டாய வினாக்கள் காணப்பட்டன. உயர் நிதிக் கணக்கீட்டுப் பாடத்தை முழுமையாக இவ்வினா உள்ளடக்கி பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இவ்வினா பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி பற்றிய அறிவு, பங்குடமை ஒழுங்குச்சட்டம் பற்றிய அறிவு, இலாப நோக்கற்ற அமைப்புகள், வியாபாரக் கணக்குகள் பற்றிய அறிவு, சொத்தினை நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தல், தனியுடைமையாளர் வியாபாரத்திற்கான கணக்குகளைத் தயாரித்தல், பங்காளர் ஒருவர் ஓய்வுபெறும்போது இலாபப் பங்கு வீதத்தினைக் கணிப்பிடல் மற்றும் VAT கட்டுப்பாட்டுக் கணக்குகள் பற்றிய அறிவு ஆகியவை மீது கவனத்தைச் செலுத்தியிருந்தது.

சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். வினா இல. 1.2 இல் பரீட்சிக்கப்பட்ட பங்குடமை ஒழுங்குச்சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவு மிகவும் குறைவாகக் காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சொத்தொன்றை நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்துவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய தேர்வு நிபந்தனைகளை வினவியிருந்த வினா இல. 1.5 இற்கு விடையளித்திருக்கவில்லை. இது பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசித்து விளங்கிக் கொள்ளாமையால் ஏற்பட்டதாகும். வினா இல. 1.6 இல், ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் உள்ள நிதித் தகவல்களை கணக்கிற் கொள்வதன் மூலம் இலாபத்தைக் கணிப்பது தொடர்பான அறிவும் கணக்கீட்டுச் சமன்பாடுகள் தொடர்பான அறிவும் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டன. பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகளை உள்ளடக்குவதா அல்லது நீக்குவதா என்பது பற்றிய சரியான ஏற்பிசைவு இல்லாததன் காரணமாக குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினா இல. 1.8 இற்கு விடையளித்திருக்கவில்லை. எனவே பரீட்சார்த்திகள் VAT கட்டுப்பாட்டுக் கணக்கில் VAT தொடர்பான பதிவுகளைத் தயாரிப்பதற்குத் தவறியிருந்தனர். சொற்பளவிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு புள்ளிகள் எதனையும் பெற்றிருக்கவில்லை. பொதுவாக பரீட்சார்த்திகளால் ஏனைய வினாக்களுக்குப் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது. பரீட்சார்த்திகள் பாடத்திட்டத்தின் மீதான அறிவை மேம்படுத்துவதன் மூலமும் சுய கற்றல் புத்தகத்தைப் கற்பதன் ஊடாகவும் அதிக புள்ளிகளைப் பெற முடியும்.

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

இங்கு மீள்மதிப்பீட்டைப் பதிவுசெய்வதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிப்பது பரீட்சார்த்தி களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்ததன் மூலம் தேவையற்ற விதத்தில் தமது நேரத்தை வீணடித்திருந்தனர். பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிப்பதற்கு எவ்வித புள்ளிகளும் ஒதுக்கப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் பாதி வினாவுக்கு மாத்திரம் விடையளித்திருந்தனர். இது பரீட்சார்த்திகள் வினாவைச் சரியானவாறு வாசித்து விளங்கிக் கொள்ளாததினாலேயே ஏற்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் திரள் தேய்மானம் மீதான செம்மையாக்கம் பற்றி கருத்திலெடுக்காத காரணத்தால் மீள்மதிப்பீட்டைச் சரியாக கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பங்காளர்களின் உரிய கணக்குகளில் இலாபத்தை விகிதசமனாக சரியானவாறு வரவு வைக்காத காரணத்தால் புள்ளிகளை இழந்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் மீள்மதிப்பீட்டு மிகையிலிருந்து ஓய்வுபெற்ற பங்காளருக்கான பகிரத்தக்க இலாபத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருக்காததால் முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்புகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்த காரணத்தாலும் சரியான விளக்கத்துடன் பேரேட்டுப் பதிவுகளை பதிந்திராத காரணத்தாலும் புள்ளிகளை இழந்திருந்தனர். சிலர் பங்காளர்களின் மூலதனக் கணக்கிற்குப் பதிலாக நடைமுறைக் கணக்கிற்கு ஆதனங்களின் மீள்மதிப்பீட்டு மிகையை செம்மையாக்கம் செய்திருந்த காரணத்தால் அவர்களால் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெறமுடியாமற் போனது.

### வினா 03

இவ்வினா வங்கிக் கணக்கிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் 2017 மார்ச் 31 இல் செம்மையாக்கப்பட்ட காசேடு மற்றும் வங்கி கணக்கிணக்கக்கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் தேவைப்படுத்தியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் காசேட்டுடன் தொடர்புடைய பதிவுகளைச் சரியாக அடையாளம் கண்டிருக்கவில்லை. அவர்கள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அத்தகைய பதிவுகளைப் பிழையாகக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இது தொடர்பான அடிப்படைக் கோட்பாட்டு அறிவைப் பெற்றிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் வங்கிக் கணக்கிணக்கத்தில் கழிப்பனவாகச் காட்டவேண்டிய குறிப்பிட்ட சில உருப்படிகளை கூட்டிக் காட்டியிருந்ததுடன் கூட்டிக் காட்டவேண்டிய உருப்படிகளை கழித்துக்காட்டியுமிருந்தனர்.

### வினா 04

இவ்வினாவில் சம்பளப் பட்டியல் முறைமை, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் செம்மையாக்கங்கள் ஆகியவை தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது. தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு காசு ஊடுசெயல்களுக்கான பதிவுகள் உள்ளிட்ட நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிப்பதற்கு இங்கு எதிர்பார்க்கப்பட்டது. இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்புப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்தனர். காசேட்டுடன் தொடர்புடைய பதிவுகளை வழங்குவதற்குத் தவறியதன் காரணமாக பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## வினா 05

பகுதி (a) இல், எந்திரத்தின் மேம்படுத்தலுடன் தொடர்புடைய செம்மையாக்கங்களைப் பதிவு செய்ததன் பின்னர் 2016 ஏப்ரல் 01 இல் உள்ள எந்திரத்தின் பேரேட்டு மீதியைக் கணிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் பகுதி (b) இல் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எந்திரம் மீது அறவிடப்பட வேண்டிய தேய்மானத்தைக் கணிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. சுங்கத் தீர்வையும் வெளியேற்றல் செலவுகளும், எந்திரத்தின் கொள்வனவு விலையிலிருந்து நிறுவுதற் கிரயம் ஆகியவற்றைப் பிழையாகக் கழித்திருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். மேம்படுத்தல் செலவுகள் எந்திரத்தின் முன்கொண்டு செல்லல் பெறுமதியுடன் கூட்டப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. பகுதி (b) இற்கு சரியான தேய்மானத் தொகையைப் பெற்றிராத பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். ஈற்றுப் பெறுமதி மற்றும் எந்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் ஆகியவற்றை அடையாளம் காண்பதற்கு தவறியிருந்ததன் காரணமாக பரீட்சார்த்திகள் தங்கள் புள்ளிகளை இழந்த சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. ஆண்டின் ஆரம்பத்தில் எந்திரத்தின் முன் கொண்டுசெல்லல் பெறுமதி எந்திரத்துடன் தொடர்புடைய திரள் தேய்மானத்தைக் கழித்து 2016.03.31 இல் உள்ள கிரயத்திற்கு மேம்படுத்தல் கிரயத்தை சேர்ப்பதன் மூலம் பெறப்பட்டிருக்க வேண்டும். முன்கொண்டு செல்லல் பெறுமதியைப் பெற்றதன் பின்னர், முன்கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்து ஈற்றுப் பெறுமதியைக் கழித்து அதன் பின்னர் எந்திரத்தின் பயன்தரு ஆயுட் காலத்தால் பிரிப்பதன் மூலம் எந்திரத்தின் தேய்மானக் கணிப்பீட்டை விளங்கிக்கொள்வதற்கு பரீட்சார்த்திகளுக்கு இயலுமாக இருத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் இதில் தங்களது கோட்பாட்டு ரீதியான அறிவை மேம்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

## வினா 06

பெரும்பாலான பரீட்சார்த்திகள் புள்ளிகளை முழுமையாகப் பெற்ற ஒரு வினா இதுவாகும். கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ஆரம்ப மீதிகளைப் பதிவுசெய்தல் மற்றும் அந்தக் கணக்குகளினுள் ஊடுசெயல்களை உள்ளிடுதல் போன்றவை பற்றிச் சரியாக அடையாளம் கண்டிராததால் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

தனியுடைமையாளர் ஒருவர் தொடர்பில் வழங்கப்பட்ட நிதித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சை மீதியைத் தயாரிப்பதன் மூலம் ஒதுக்கப்பட்ட 10 புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் மூலதனக் கணக்கின் ஆரம்ப மீதிகளைச் சரியாக அடையாளம் காணத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வியாபார வருமதிக் கணக்குகள் மற்றும் வியாபார சென்மதிக் கணக்குகளைத் தயாரிப்பதன் மூலம் விற்பனை மற்றும் கொள்வனவுத் தொகைகளைக் கண்டுபிடித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்குப் பதிலாக ஐந்தொகையைத் தயாரித்திருந்தனர். புள்ளிகளை முழுமையாகப் பெற்றிருந்த பரீட்சார்த்திகளின் சதவீதம் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிப்பதற்கு முயற்சித்திருக்கவில்லை. இவ்வினாவில், வியாபார வருமதிக் கணக்கு, வியாபார

சென்மதிக் கணக்கு, வங்கிக் கணக்கு மற்றும் மின்சாரக் கணக்கு ஆகியவற்றின் மீதிகளைக் கொண்டு மூலதன ஆரம்ப மீதியினைக் கணிப்பிடுவதன் மூலம் பரீட்சை மீதியைத் தயாரிக்க தேவைப்படுத்தப்பட்டது. சில பரீட்சார்த்திகள் வியாபார மற்றும் இலாப அல்லது நட்டக் கணக்கினைத் தயாரித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சொற்பளவிலான பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியின் சரியான அமைப்பினைப் பின்பற்றியிருக்கவில்லை. அடிப்படைக் கணக்கீட்டு அறிவினைக் கொண்டிருந்த பரீட்சார்த்திகளால் வினாவைச் சரியானவாறு விளங்கிக்கொண்டு பேரேட்டுக் கணக்கு களில் இருந்து மீதிகளைப் பிரித்தெடுத்ததன் மூலம் இலகுவாகப் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

## வினா 08

இங்கு, பங்குடமை ஒன்றிற்கான இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கு, பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் மற்றும் பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் போன்றவற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. சரியான விடையை வழங்கியதன் மூலம் சில பரீட்சார்த்திகளால் முழுமையான புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது. எவ்வாறாயினும், பரீட்சார்த்திகளில் சிலர் நடைமுறைக் கணக்குகளைத் தயாரிப்பதுடன் தொடர்புடைய பதிவுகளைச் சரியாக அடையாளம் கண்டிருக்கவில்லை. நடைமுறைக் கணக்குகளில் பங்காளர்களுடன் தொடர்புடைய மூலதனம் மீதான வட்டியை பதிவுசெய்வதற்கும் பங்காளர்களுக்கிடையே இலாபத்தைப் பகிர்வதற்கான விகிதத்தைச் சரியாக விளங்கிக்கொள்வதற்கும் பரீட்சார்த்திகள் தவறியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அத்துடன் மூலதனக் கணக்குகளில் நன்மதிப்புடன் தொடர்புபட்ட செம்மையாக்கங்களை சமர்ப்பிக்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அவர்கள் இச்செம்மையாக்கங்களை நடைமுறைக் கணக்குகளில் சமர்ப்பித்திருந்தனர். பரீட்சார்த்திகள் தொகைகளை கிட்டிய ஆயிரங்களில் எடுப்பதில் தவறியிருந்ததால் எண்கணித வழுக்கள் ஏற்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் மூலதனம் மீதான வட்டியைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

## வினா 09

இங்கு நீச்சல் கழகம் ஒன்றிற்கான வருமான – செலவினக் கணக்கினைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பரீட்சார்த்திகள் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் கணக்குகள் மீதான அறிவை மேம்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனர். பரீட்சார்த்திகள் அங்கத்துவக் கட்டணத்தைக் கணிப்பிடல், முற்பணமும் நிலுவையாகவுள்ள அங்கத்துவக் கட்டணங்களும், நடப்பு ஆண்டுடன் தொடர்புடைய அங்கத்துவக் கட்டணங்கள் போன்றவற்றைக் கருத்திலெடுப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டனர். இவ்வினாவுக்கு விடையளித்த பரீட்சார்த்திகள் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அங்கத்துவக் கட்டணத்தை இலகுவாகக் கணிப்பிடக்கூடியதாக இருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் அதனைக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகளில் சிலர் வரவு மற்றும் செலவுகளைச் சரியாக அடையாளம் காணத் தவறியிருந்ததன் காரணமாக புள்ளிகளை இழந்திருந்தனர். சொற்பளவிலான பரீட்சார்த்திகள் செய்முறைகளைத் தெளிவாகச் சமர்ப்பித்திருக்க வில்லை. இவ்வினா ஒரு இலகுவான வினாவாக இருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருக்கவில்லை.

## பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

## வினா 10

இவ்வினாவில் முகாமையின் பாவனைக்காக முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. இது இரட்டைப் பதிவு, கணக்கீட்டு நியமங்கள் மற்றும் எண்ணக்கருக்கள் மீதான அறிவைப் பரீட்சிப்பதில் கவனம் செலுத்தியிருந்தது. இது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு முற்றடக்க வருமானக் கூற்றை வழங்குவதற்கு எதிர்பார்த்தது. அத்துடன் இது இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் பற்றிக் கருத்திலெடுப்பதற்குக் கோரியிருந்தது. பரீட்சார்த்திகள் வழக்கிழந்துபோன தொக்கு உருப்படிகள் மற்றும் தனிச்ச வட்டி என்பவற்றுக்கான செம்மையாக்கங்களை சரியாகச் செய்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் வருமதி மீதியிலிருந்து அறவிடமுடியாக் கடனைக் கழிப்பதற்குத் தவறியிருந்தனர். ஆகையால் வருமதிகளுக்காக 5% இல் கணிப்பிடப்படும் விடுதொகையினை (allowance) பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வருமான வரிக்கான செம்மையாக்கங்களைச் செய்திருக்க வில்லை. அவர்களில் சிலர் நடப்புப் பரிப்புகளின் (பொறுப்புகள்) கீழ் வங்கி மேலதிகப்பற்றினை சமர்ப்பித்திருக்கவில்லை. பரீட்சார்த்திகள் நிதிக் கூற்றுக்களில் அட்டுறு செலவுகள் மற்றும் முற்கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய செம்மையாக்கங்களைச் சரியாகச் சமர்ப்பிப்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும். செய்முறைகளைச் சரியாக மேற்கொண்டிருந்த பரீட்சார்த்திகள் முற்றடக்க வருமானக் கூற்றில் தொகைகளை சரியாகச் சமர்ப்பித்து புள்ளிகளை முழுமையாகப் பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகளில் பெரும்பாலானவர்கள் தேய்மானச் செம்மையாக்கத்தைச் சரியாகச் சமர்ப்பித் திருந்தனர். புள்ளிகளைப் பெறுவதற்கு நேரத்தை உரியவாறு பயன்படுத்தி என்ன எதிர்பார்க்கப் பட்டுள்ளதோ அந்த விபரத்தை மாத்திரம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றினைச் சரியான அமைப்பில் வழங்குவதிலும் செம்மையாக்கங்களைப் பொருத்தமான இடங்களில் சமர்ப்பிப்பதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**பொதுவான குறிப்புகள் :**

அடிப்படைக் கணக்கீட்டுக் கோட்பாடுகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள், பங்குடமைச் சட்டம் 1890 மற்றும் கம்பனிகள் சட்டம் ஆகியவை பற்றிய விளக்கத்தைப் பரீட்சார்த்திகள் கொண்டிருப்பது தேவைப்படுத்தப்படுகிறது. விடைகளை வழங்கும்போது பக்கங்களை வேறாக்குதல், வினா இலக்கங்களை இடல் (பரீட்சார்த்திகளில் சிலர் பக்க இலக்கங்களை வினா இலக்கங்களாகக் குறிப்பிட்டிருந்தனர்), சம்பந்தப்பட்ட விடைகளுடன் அதன் செய்முறைகளையும் சமர்ப்பித்தல், குறிப்பிட்ட வினா ஒன்றிற்கான விடையினை வேறுபட்ட விடைத்தாள்களில் வழங்காதிருத்தல் (வேறுபட்ட பக்கங்களில் விடைகளை எழுதுவதாயின் அது தொடர்பான தொடர்புகளை இடுக.) என்பவை பற்றிக் கவனம் செலுத்துவதோடு, தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விடைகளை எழுதுதலிலும் கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதை நினைவிற்கொள்ளவும்.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்திசெய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்:**

1. பாடத்துடன் தொடர்புடைய பாடத்திட்டத்தை முழுமையாகப் படிக்கவும்.

2. வினாப்பத்திரத்தைப் பெற்றதும், அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

3. வினாவை பல தடவைகள் வாசித்து அதில் என்ன கேட்கப்பட்டுள்ளதோ அதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

4. பரீட்சை நேரத்தை வினைத்திறனான வகையில் பயன்படுத்தவும்.

5. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கங்களும் உமது சுட்டிலக்கமும் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

6. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளித்து பயிற்சி பெறுவதன் மூலம், உங்கள் பாட அறிவை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடையளிக்கும் திறனையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

7. ‘‘செயல் வினைச்சொல் நிரல்’’ ஒன்று வினாப்பத்திரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த வினைச்சொல் நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் விடைகளை எழுதுதல் வேண்டும்.

8. சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பது முக்கியமானதாகும்.

9. சித்தியடைகின்ற பிரதான நோக்கத்துடன் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -